பதிகைப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பெற்றது.

இந்துசாதனம்.

விரோதிகு (1889) இலவகிரி உடை திரம்பமாதம்.

THE HINDU ORGAN.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வினைத்தானு, மான்ற பெருமை தரும்."

பத்திரக் கிரயம்.

யாழ்ப்பாணப் பட்டினம்:	ஆ 1-க்கு	ரூ. 5-60
வெளியூர், இந்தியா:	,,	ரூ. 9-40
தொடுவாய்ப்பகுதி:	,,	ரூ. 9-40
தனிப்பிரதி:		சதம் 6

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

விளம்பர விகிதம்.

முதன்முறைக்கு:—ஒருகலம்		ரூ. 9-40
,,	அரைக்கலம்	ரூ. 5-00
,,	காற்கலம்	ரூ. 3-15
,,	ஒரு அங்குலம்	சதம் 65

அடுத்த முறைகட்கு ஷை விகிதங்களிற் பாதி. விளம்பரங்கள் முற்பண மனுப்பினுலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—௩௭. } யாழ்ப்பாணம்:—குரோதனஆ கார்த்திகைமீ ௪௨; (1925 நவம்பர் 19) வியாழக்கிழமை. { இலக்கம்—௩௯

கணபதி துணை.

சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ளீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது நூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானார்தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோது
மதம்பூத்தவினாயகன்றாள்வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

(H. 41.)

இனும் காலண்டர் இனும்.

எங்களிடம் கட்டி வெள்ளியிலும் 1-ம் தெ. 2-ம் தெ. வெள்ளியிலும் மிச்சம் துப்புரவாக வேலைமுடித்த முரசுகுத்தி கெங்காதரக்கொடி கைகோர்வை, முகப்புக்கொடி, காஞ்சிஅரைஞாண்கொடி, கால்தண்டை, கொலுசு, வகைகளும் கடயம் கங்கணம், மயிர்மாட்டி, ஒட்டியாணமும், இமிடேசன் செகப்பு கம்மல் தோடு கடுக்கன் மோதிரங்கள் இன்னும் இதரவெள்ளி தங்க நகைகளும் பட்டுபருத்திமுதலிய ஜவுளித் தினுசுகளும் விலைகள் சகாயம். விலாசம் தெரிவித்தால் பிரைஸ்லீஸ்ட் அனுப்புகிறோம். சுபம்.

தொ. வே. சென்னிகெட்டி & சன்ஸ்
சராப், ஜவுளி வியாபாரம்
குகை, சேலம்,
தென்-இந்தியா.

(H. 41.)

இனும்! காலண்டர் இனும்!!

எங்கள் கம்பெனியில் கட்டி வெள்ளிச் சாமான்களும், தெ. 1-ம், தெ. 2-ம் வெள்ளியாலும் மிச்சம் துப்புரவாக வேலைசெய்த முரசுகுத்தி கெங்காதரக் கொடி, கைகோர்வை முகப்புக் கொடி, காஞ்சிக் கொடி, கால் தண்டை, செயின்கொலுசு, இன்னும் காலிற் போடும் சாமான்களும், மயிர்மாட்டி, கடயம், ஒட்டியாணம், மோதிரம், புதுச் சிகப்புக் கம்மல், தோடு, கடுக்கன், சீமை வயிரக்கம்பி சட்டங்கள், ஜவுளி பட்டும் பருத்தியும் கலந்த சேலை, சோமன், இன்னும் வேண்டிய சாமான்களும் இருக்கின்றன. தாங்கள் விலாசம் தெரிவித்தால் கிரயஜாபிதா அனுப்புகிறோம்.

நா. பிளே செட்டி அன் கோ.,
சரூப் ஜவுளி வியாபாரம்,
குகை, சேலம்,
தென் இந்தியா.

(H. 39.)

வீ. ஸாமி. அய்யங்காருடைய

அறைக்கீரைவிதைத் தைலம்.

பித்த மேகரோனது சிரநுக்கேற அதனுற் கண்மறைப்பு, கண்ணெரிச்சல், கண்புகைச்சல், கண்ணிலிருந்து நீர்வடிதல், ஒருதலைவலி, இருதலைவலி, பீனிசம், காதினுல் சீழ்வடிதல், காது இரைச்சல், காதுவலி, ஐந்துவருஷத்திற்குட்பட்டதாயும் இரைச்சலோடுங் கூடிய காதடைப்பு, கரப்பன், தேமல், சிரசில் மயிர் உதிர்தல், கொண்டிவிழுதல் முதலான ரோகங்களை நிவர்த்திப்பதுமன்றி மயிரை நன்றாய் வளரச்செய்யும் இந்த நோட்டீசில் காணப்படாத கழுத்திற்குமேற்பட்ட சகல வியாதிகளையும் அனுகூலப்படுத்தும், மேற்கண்ட வியாதியில்லாதவர்கள் தேய்த்துஸ்நானம்பண்ணினுல் தேகத்திற்குக் குளிர்ச்சியையும் ஆரோக்கியத்தையுங் கொடுக்கும். வாரத்திற்கு இரண்டுதடவை காலை 8 மணிக்குள் வெந்நீரில் சீயாக்காய்தேய்த்துஸ்நானஞ்செய்து யாதொரு பத்தியமுமின்றி உடனே போஜனஞ் செய்துகொள்ளவேண்டும். 8 நாள்வரையிலும் சுகந்தம் மாறுது அன்று பகலில்மாத்திரம் தூங்கக்கூடாது. 10 பலங்கொண்ட புட்டி 1-க்கு கிரயம் ரூபா 1—10—0. 'பாக்கிங்போஸ்டேஜ் சார்ஜு பிரத்தியேகம்'

விற்பனைக்கு கமிஷன் ஏஜண்டுகள் தேவை. விபரம் எழுதிக்கேட்கும்.'

ஜனபகந்தம்மாள்,
8 நம். பிராடவே ரோட்
மைலாப்பூர், சென்னை.

(Q. 67.)

கணபதி துணை.

சுரத்தை நீக்கும் அற்புதமான மருந்து.

துளிர் (குலைப்பன்) காய்ச்சல் முதலிய சகல விதமான சுரங்களையும் டக்டர் மைக்கோயின் "சுரசங்காரி" ஔஷதம் உடனே மாற்றிவிடும். டக்டர் மைக்கோயின் சுரசங்காரி யென்னும் மருந்து எவ்வகைச்சுரத்தையும் மந்திரவசத்தால் மாற்றுவதுபோல உடனே மாற்றிவிடுகின்றது. மற்றும் வைத்தியர்களினுல் மாற்றமுடியாத நெடுநாட்பட்ட எவ்வகைச்சுரமும் இந்த மருந்தில் நாலு முன்று போத்தலை உபயோகிப்பதனுல் முற்றுக மாறிவிடுகின்றது. ஒருமுறை பரீட்சித்துப் பாருங்கள். ஒருபோத்தல் கொண்ட மருந்தின்விலை ரூபா 1 சதம் 50. இம்மருந்து கோழும்பு கார்ஜில்ஸ் (Cargills Ltd.) கம்பனியிலும் மற்றும் மருந்துச்சாலைகளிலும் பெறற்பாலது. (Y. 47.)

சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பலவியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலகநன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனுல் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனுலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக்கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்ரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பீதானு, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகப்பூ வங்கபஸ்பம், அப்ரக்பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம், சாம்பிராணிப் பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது,

இதனுல் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம் பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல் வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதக வாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்தலேகியத்தின் விலை முத்தல் ஒன்றுக்கு ரூபா உ0. அரைமுத்தலுக்கு ரூபா க0. கால் முத்தலுக்கு ரூபா ௩ தாபற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினங்கு முதலிய தொடுவாயிரச்சியப்பகுதிக்கு வீ. பீ. சட்டம் இல்லாததினு முன் மணி ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
வெருான ஆரோக்கிய சுகாதாரவைத்தியசாலை,
காத்தான்குடி போஸ்டு,
மட்டக்களப்பு,
சிலோன்.

(M. 36.)

ESTABLISHED, 1909.

MESSRS. A. S. M. A. KHADER BROTHERS
Kairul Muslimeen Medical Hall
PORTONOVO (South Arcot Dt; India.)

இந்த விளம்பரம்முழுதும் தாங்களும் வாசித்து தங்கள் சிநேகிதர்களுக்கும் வாசிக்கக்காண்பியுங்கள். குளிக்கப்போய் சேற்றைப் பூசிக்கொள்வது போல் வீண் ஆரவாரமான விளம்பரங்களைக் கண்டு மிரண்டுவிடாதீர்கள்.

நண்பிற்குகந்த அன்பர்காள்! நமது கம்பெனி ஸ்தாபித்த 1909-வது வருடமுதல் நாளது தேதிவரையில் மேற் காணப்பட்ட லேகியத்தைச் செய்து இந்தியா, பர்மா, சிலோன், மலாய் முதலிய தேசவாசிகளுக் கனுப்பி ஒவ்வொரு மஹான்களாலும் பிரபுக்களாலும் பிரயோகித்து நோயற்ற வாழ்வென்னும் பாக்கியத்தை குறைவற்ற செல்வமாயடைந்து ஒவ்வொரு கனவான்களாலும் மெக்கு யோக்கிய நற்சாக்ஷிகளும் அனந்த பரிசுகளும் பெற்றுவருவது நேயர்கள் அறிந்த விஷயமேயாம். தற்கால நிலைமைக்கேற்றுப்போல் அனந்த பொய்வசனங்களை விடுத்து புதிது புதிதாக இத்தகைப்போன்ற குருவிலேகிய மென ஓர் நாமஞ் சூட்டி பத்திரிகை நோட்டீஸ் மூலமாய் வெளியிட்டிருக்கும் போலி மருந்துகளை நம்பிக் கையாண்டு பொருள் கஷ்டமும், மனக்கஷ்டமுங் கொள்ளாது நீடியகாலத்து அனுபவ முத்திபெற்ற உண்மையான மருந்துகளை நாடுமுடைய யோகவான்கள் உணர்ந்து தருவித்து அருந்துவீர்களாக.

இதுவே அசல் பாகமுள்ளது! ஒருவருமிகழ்ந்து பேசாதது!!

உத்திரவாதமுள்ள

சித்தஜானந்த சிட்டுக்குருவி லேகியம்.

இச்சிறந்த இராஜ ஔஷத லேகியமானது முற்காலத்து மன்னர்களால் உபயோகித்துப் பிரசன்னமாய்ப் புகழ் பெற்று வீரியசக்திக் குறைபாடு இல்லாதிருக்கின் இன்ப வாழ்க்கையையடைந்து புத்திர பௌத்திர சம்பன்னராய் நீடூழிவாழும் பொருட்டே நமது முன்னோர்களால் கூறப்பட்ட பழைய எட்டுப்பிரதிகளிலுள்ள ஔஷத பாகங்களிற் சிறந்ததும், சோர்வில்லாததைரியத்தை உண்டாக்கக் கூடியதுமான ஒப்பற்ற ஓர் புருஷ சஞ்சீவியாகின்றது. இச்சிறந்த அபூர்வ குண லேகியத்தின் ஆச்சரிய குணத்தை உடனுக்குடன் அறியவேண்டியதென்றே ஜனுனுகூல நன்மைக்காகவே இதனை மிகவுங் குறைந்த விலைக்கு வெளியிட்டிருக்கின்றோம். மற்ற விவரங்களை நமது கேட்லாக்கில் காணலாம்.

ஷை லேகியத்தின் முக்கிய குணமாவது.

வாதபித்த சிலேற்மம் மிகுதிக் குறைவால் ஏற்படும் இரத்தக் குறைவு ஏழுவகை தாதுக்களின் [illegible]ளும் அஸ்தி, வெட்டைச்சூடு, பிரமேகவெட்டை, நீர்க்கடுப்பு, நீர்சுருக்கு, நீர்எரிச்சல், நீர் [illegible]ருத்தல் ஆகிய நோய்களையும் நித்திரையில் அடிக்கடி உண்டாகும் தாதுநஷ்டம், பித்[illegible]ங்கம், Spermatorrhea, தேகமெலிவு, சதா இடுப்புவலி, கைகாலசதி, மலச்சிக்கல், பசிமந்தம், தேகத்தில் பலவிடங்களிலும் ஒடித்திரியும் பலவித வாய்வுகள், நெஞ்சுவலி Nervous-diseases ஆகிய நோய்களைச் சுகப்படுத்தி இரத்தத்தைச் சுத்தி செய்து புதிய மேனியுடன் இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, அறிவுவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களைப் பெறுவதில் இதைவிட சிறந்த மருந்து கிடைப்பது அரிதினுமரிது.

40 நாள் சாப்பிடும் பெரிய டப்பி 1-க்கு விலை ரூ. 8—0—0
20 நாள் சாப்பிடும் சிறிய டப்பி 1-க்கு விலை ரூ. 4—0—0

வி. பி. தபால் சார்ஜு பிரத்தியேகம் முற்பணமனுப்பினுல் வி-பி. செலவு இனுமாயனுப்பப்படும். பினங்கு, சிங்கப்பூர், மலாக்கா, கோலாலம்பூர், கிள்ளான் முதலிய Straits Settlements வாசர்களும் Federated Malay States வாசர்களும், மருந்தின் கிரயமும் தபால் செலவு ரூ. 2-ம் சேர்த்து முற்பணமனுப்பி மருந்து பெறவேண்டும். ஷை பூர்களுக்கு திண்ணமாய் வி. பி. யில் அனுப்பப்படமாட்டாது.

இச்சிறந்த லேகியமானது சிட்டுக்குருவியின் கிருதம் அதாவது ஷை குருவியின் சத்தால் செய்யப்படவில்லை யென்றாவது, அல்லது இந்த லேகியத்தைச் சாப்பிட்டதால் குணமொன்றுஞ் செய்யவில்லை யென்றாவது அல்லது சில போலியர்கள் ஆயிரக்கணக்கான ரூபாய்களை சபதங்கள் கூறிகொண்டு பத்திரிகை வாயிலாய் வெளிவந்த இத்தகையான குருவிலேகியங்களுக்கு இப்படிப்பட்ட ஆச்சரிய குண முண்டென்றாவது அல்லது இந்த அபூர்வ குண லேகியத்தைச் செய்து காட்டினுலாவது, கடவுளுக்குப் பொறுவாய் சத்தியமாய் ரூபிப்பவர்களுக்கு அவர்களால் கூறிய சபதங்களின் தொகையும், நமது கம்பெனியால் ரூ 1000 இனுமாயும் சேர்த்துக் கொடுக்கப்படும். அப்படியே ரூபித்தும் இனுமுடைய பணத்தைக்கொடுக்கத்தவறினுல் கோர்ட்டு மூலமாகவுஞ் செய்துகொள்ளலாம். ஆர்டர்செய்யும் நேயர்கள் இப்பத்திரிகையின் பெயரைக் குறிப்பிட்டெழுதவும்.

என் மேல்விலாசம்:—
Tel. Address:—
Kader Brothers
PORTO-NOVO
(Y. 38.)

மெஸ்ஸர்ஸ ஏ. எஸ். எம். ஏ. காதர் பிறதர்ஸ்,
கைறுல் முஸ்லிமீன் வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை,
தென்னாற்காடு ஜில்லா.

ஒற்றுமை.

சித்திரப் படங்களுடனும் விநோதப் படங்களுடனும் தமிழ்மொழி வளர்ச்சி கருதி வரும் மாதப்பத்திரிகை 'ஒற்றுமை'க்கு 6-வது வருடம் நவம்பர்மாதம் பிறக்கப்போகிறது. மாதிரிப் பிரதி இனும். வருடசந்தா உள்ளூரு ரூபா 1. வெளிநாடு ரூபா 1¼. ஏஜண்டுகள் தேவை. நல்ல கமிஷன். 'ஒற்றுமை' ஆபீஸ்,
(H. 43.) சைதாப்பேட்டை, மதராஸ்.

சமையல் சௌக்கியம்.

இந்தியாவிலும் வெளிநாட்டிலும் புகழ்பெற்று விளங்கும்.

ருக்குமணி குக்கர்.

சமையல் அடுக்கை உபயோகிப்பவர்களுக்கே உண்டு. முதல் 8 பேர்களுக்கு ஒரு மணிநேரத்தில் சொற்ப செலவில், தொந்தரவேயில்லாமல் சாதம் 5 கறிவகைகள் சமைக்கும். தனித்தவர்களுக்கும் குடும்பிகளுக்கும் வீட்டிலும் பிரயாணத்திலும் உபயோகம்.

1, 2, 4, 6, 8, பேருக்குரியது ரூபா 13, 18, 22, 27, 33-ல் கிடைக்கும். தபாற்கூலி வேறு. விபரப் புத்தகம் இனும். ஏசண்டுகள் தேவை. உடனே எழுதுக.

ருக்குமணி குக்கர் கம்பெனி,
இராயப்புரம் (2) சென்னபட்டினம்.
(Y. 45.)

அஷ்டபந்தனமருந்து.

இந்தியாவிலிருந்து வருவிக்கப்பட்ட சுத்தமான சாக்குகளைக் கொண்டு செம்மையாகச் செய்யப்பட்ட (சுவாமிக்குச் சாத்தும்) அஷ்டபந்தனமருந்து எம்மிடத்தில் விலைக்கிருக்கிறது.

முத்தல் ஒன்றின் விலை ரூபா 5.

க. வைத்தியநாதக்குருக்கள்,
சிவன்கோவில்,
வண்ணார்பண்ணை.

(M. 37)

சேலம் ஜவுளிதினிசுகள்.

எங்களிடம் சொந்தத் தறிகளில் செய்யப்பட்ட பட்டுத்தினிசுகளும், பட்டும் பருத்தியும் கலந்த தினிசுகளும், தாளம்புக்கரைப் புடைவைகளும், வெள்ளை ஜவுளி தினிசுகள், குஞ்சடஞ்ச, சன்னஞ்ச, பவுன்பேட்டு, இன்னும் பல மாதிரிகள் இருக்கிறது. விலாசம்தெரிவித்தால் பிரைஸ் லிஸ்ட் இலவசமாய் அனுப்புகிறோம்.

விலாசம்:
கோ. ப. சி. அ. வேணுகோபால்செட்டியார் அண்ட் பிறதர்ஸ்,
ஜவுளி & கமிஷன் ஏஜண்டு,
குகை, சேலம். S. I.

தந்தி விலாசம்:
வேணுகோபால்,
சேலம்.
(H. 32.)

இந்து சாதனம்

யாழ்ப்பாணம்: குரோதனஞு
கார்த்திகைமீ ச-ம்உ வியாழக்கிழமை.

மரணதண்டனையை ஒழிக்கவேண்டுமெனல்.

மனுஷரைக் கோலைசெய்தவர்களை விசாரணைசெய்து மரணதண்டனை விதிப்பதே நீடித்தகாலமாக, அயிரோப்பா முதலிய தேசங்களிலுள்ள தத்துவராச்சியங்களின் பிரமாணமாகவிருந்தது. ஆனால், கடவுளாலன்றி மனுஷனை இன்னொரு மனுஷன் உண்டாக்குதல் முடியாதென்ற காரணம் பற்றி இக்காலத்துள்ள அரசாங்கத்தினர் பலர் தம்மால் உண்டாக்க முடியாத மனுஷனுடைய உயிரைப் போக்குவதும் முறையல்ல என்ற கொள்கையுடையராய், கொலைக் குற்றவாளிகட்குத்தானும் மரணதண்டனை விதிப்பதைத் தவிர்த்துவிட்டனர். இவ்வாறே அவஸ்திரியர் 1918-ம் ஆண்டு தொடக்கமாகவும், இத்தாலிய அரசாங்கத்தார் 1889-ம் ஆண்டு முதலாகவும், ஒல்லாந்தர் 1870-ம் ஆண்டுதொட்டும், சுவிடின் அரசர் 1902-ம் வருடந் தொடங்கியும், நோர்வே நாட்டினர் 1921-ம் ஆண்டு தொடக்கமாகவும், ரூமேனியர் 1864-ம் ஆண்டுமுதற் றொட்டும் மரணதண்டனையை ஒழித்துவிட்டனர். அமரிக்காவிலும் சிற்சிலவிடங்களில் மரணதண்டனை ஒழிக்கப்பட்டிருக்கின்றது.

ஆனால் இப்பூமியின் பெரும்பரகத்தைத் தங்குடைக்கீழ்ஆளும் ஆங்கிலஅரசினர் மாத்திரம் இதுவரையில் இத்தண்டனையைநீக்காதிருப்பது ஆச்சரியமாம். இங்கிலாந்திலே பலர் இம்மரணதண்டனையை அறவே யொழித்துவிடல்வேண்டுமென்ற நோக்கமுடையவர்களாக விருக்கின்றார்கள். இந்தியாவிலும் சட்ட நிரூபண சபை அங்கத்தவரொருவர் இதனைத் தவிர்த்துவிடுதல்வேண்டுமென வாதாட முற்பட்டிருக்கின்றனர் நமது இலங்கைச் சட்ட நிரூபண சபை அங்கத்தவர்களும் இதனைச் சிந்திப்பார்களாக.

சிவநாம மகிமை.

[துறைமங்கலம்
சிவப்பிரகாசசுவாமிகள்
அருளிச்செய்தது.]

கலிவிருத்தம்.

வருந்தி யாற்றி வளர்த்த கதிர்த்தலை
பொருந்து வான்பயிர் போற்றுநர் போலவே
விரிந்த வேணியில் வெண்மதி சூடிபின்
திரிந்து காப்பன் சிவசிவ வென்மினே.

இ - ள்: வருந்தி ஆற்றி வளர்த்த - பிரயாசப்பட்டுச் செய்து வளர்த்த, கதிர்த்தலை பொருந்து வான்பயிர் - கதிராகிய தலைபொருந்தியபெரியநெற்பயிரை, போற்றுநர்போலவே - (மிருகம் பறவை முதலியவற்றால் அழிக்கப்படாது) காக்கின்ற உழவரைப்போல, விரிந்த வேணியில் வெண்மதி சூடி - பரந்த சடாபாரத்தின்மீது வெள்ளிய சந்திரனையணிந்த சிவபிரான், பின் திரிந்து காப்பன் - (சிவநாமத்தைச் சொல்லுவோர்க்குப்) பின்னே திரிந்து (அவருக்கு யாதும் இடையூறு நேராவண்ணம்) காத்தருளுவர்; சிவ சிவ என்மின் - (ஆதலினாலே) "சிவ சிவ" என்று சொல்லுங்கள் எ-று.

சிவநாமத்தைஉச்சரிப்பவர்களுக்கு யாதும் அபாயம் நேராவண்ணம் பரமசிவன் அவர்பின் சென்று காத்தருளுவர் என்பதாம்.

தக்கனுடைய சாபத்தினால் தன் கலைகள் ஒவ்வொன்றாக நாள்தோறும் தேய்ந்துவரக் கண்ட சந்திரன் அஞ்சி அடைக்கலம் புகுந்தவிடத்து அச்சந்திரனுக்கு அபயங்கொடுத்து அவனைத் தமது சடைமுடியின்கண்ணேவைத்துத் தேய்தலும் வளர்தலும் அழிவின்றி இருக்கச் செய்த கருணைவள்ளலாகிய சிவபிரான் சிவநாமத்தைச் செப்புவார்க்கு யாதும் அபாயம் விளையாவாம் காத்தருளுவாரென்பார் "விரிந்தவேணியில் வெண்மதிசூடி பின் திரிந்து காப்பன்" என்று கூறினார்.

அர்ச்சுனன் நிடபத்தியோடு சிவநாமத்தை உச்சரித்துக்கொண்டுசிவபிரானைவேண்டி அருந்தவம்புரிந்த சமயத்து, அவன் பகைவனாகிய மூகாசுரனாகக்கொடியோனது ஏவலினால் மூகாசுரனென்பவன் பன்றியாகி அர்ச்சுனனைக் கொல்லும்படி செல்ல, அதனைத் திருவுளத்துக் கொண்ட சிவபிரானாவர், உலகமாதாவாகிய உமாதேவியார் முருகவேளைக் குமரனதயாக எடுத்துக்கொண்டு குறமகளாகிப் பின்றொடர்ந்து செல்ல, தாம் கிராத வேடம் பூண்டு தமது அருமைத்திருக்கரத்தில் அம்புவில்லைப் பரித்து, பொழிதிருக்கும் பட்டினபரிபாலன சங்கமாக வெளிப்பட்டிருக்கிறதென்றும், தேசநன்மை விருத்தி முதலானவற்றிற்கு மாறாக உழைப்போரை வட்டாரப் பிரதிநிதிகளாகத் தெரிந்தனுபபுதல் தவறாகுமென்றும்கூறி, பட்டினபரிபாலனசங்க எல்லைக்குட்பட்ட நிலங்களின்மீது விதிக்கப்பட்டிருக்கும் வரிகளைப்பற்றிப் பேசத் தொடங்கினர். சங்கத்தின் ஒரு சிறுபாகமே இப்பொழுது விதிக்கப்பட்டிருக்கும் விகிதத்துக்குத் தக வருவாயுடையதா யிருக்கிறதென்றும், ஒரு மைலுக்கப்பாலுள்ள எஞ்சியபெரும்பாகம் வருவாயின்றிக் கிடக்கின்றதென்றும், அங்கு விதிக்கப்பட்ட வரிவிகிதம் சரியானதன்றென்றும், ஒவ்வொரு வீட்டிலும் மலகூடம் அமைக்கப்படவேண்டுமென்று கட்டாயப்படுத்தப்படுமாயின் இங்குக் குடியிருப்போர் மலவாளிகளோடு ஊடாடும் வேலைபாட்டினால் தயவுபெற்றுக் குடியிருக்கவேண்டி வருமென்றும் பிறவிஷயங்களும் கூறி, எமது வார்த்தைகளுக்கு ஷை சங்கம் செவிகொடாதொழியின் வரி இறுப்பவர்களாகிய நாங்கள் எல்லோரும் ஒருங்கு சேர்ந்து பட்டின பரிபாலன சங்கம் வேண்டாமெனச் சாதித்தலே முறையாகும் என்றனர்.

ஸ்ரீ ஏ இளையப்பா அவர்கள் பட்டினபரிபாலன சங்கத்தைக் கண்டித்து அதிகஆத்திரத்துடன் சில வாக்கியங்கள் கூறினர். தெருக்களைச் செப்பனிடுவதில் மேற்படி சங்கம் கைக்கொள்ளும் முறைகள் தவறானவையென்றும், நன்கு செப்பனிடப்படுமாயின் ஒரு வருட காலத்துக்கேனும் தெருக்கள் சீர்கெடாதிருக்குமென்றும், வேண்டுமாயின் ஒரு தெருவைத் தமது பொறுப்பில் விட்டால் அதனைச் செப்பனிட்டுக்காட்டுவதாகவும் கூறினர்.

இரண்டாம் வட்டாரத்தில் வசிப்பவராகிய மிஸ்டர் ஆசீர்வாதம் அவர்கள் தேவரீர்க்குளத்தருச் சமீபமாகப் பிரித்த மலகூடம் இல்லாமையால் அங்குள்ளோர்படும் கஷ்டங்களைப்பற்றியும், இப்பொழுது அங்குள்ள குளக்கரைகள் மலகூடமாகப் பாவிக்கப்படுகின்றனவென்றும், மலகூடம்வேண்டுமென்று மேற்படி சங்கத்தாரிடம் முறையிடும்போது அவர்கள் பணமில்லையென்று விடையிறுக்கிறார்களென்றும் கூற, கொழும்பு வங்கியில் வீணே கிடக்கும் பணத்தைச் செலவு செய்யலாமே எனச் சபையிலிருந்து ஒரு வாக்கியம் எழுந்தது. அங்குள்ளார் முதுகெலும்பில்லாதவர்களாதலால் சங்கத்தார் கூறும் விடையுடன் திருப்திப்படவேண்டியதுதான். ஏனை அவர்களெல்லோரும் ஒருங்கு சேர்ந்து தம்மவர் குறைகளை முறையிடக்கூடாதெனப் பிரசாரகர் கூறினர். பின்னரும் மிஸ்டர் ஆசீர்வாதமவர்கள் இங்குள்ள படித்த வகுப்பினரின் மேலான நோக்கம் யாதென்றால், சட்டநிரூபண சபை பட்டின பரிபாலனசபை என்னும் இவற்றின் அங்கத்தவர்களாக வருதலேயாம். அங்ஙனம் விரும்பும் படித்தவகுப்பினர் அவற்றைப் பெறும்பொருட்டுத் தமது வீடுவாசல் தோட்டம் முதலானவற்றை ஈடுவைத்துக் கடன்காரராகி ஈற்றில் எல்லாவற்றையும் இழந்து பேரிடர்ப்படுகின்றனரென்றும் கூறி, ஈற்றில் இப் பட்டினபரிபாலன சங்கத்தை அதிவிரைவில் நீக்கிவிடவேண்டுமென்று பகர்ந்தனர்.

5-ம் வட்டார அங்கத்தவராதற்கு முற்பட்டு நிற்பவரிலொருவராகிய ஸ்ரீ நவரத்தினமவர்கள் சில கூறுமாறு சபாநாயகரால் வலிந்து கேட்கப்பட்டனர். சபையோர் அவரைப் பேசவிடவொண்ணாதெனத் தடுத்தனர். சில கூற எழுந்த அவர் பட்டினபரிபாலன சங்கம்வேண்டும் என உரத்துரைத்தார். வரியிறுப்போர் தமது குறைகளை நிவிர்த்திசெய்வதற்கு மார்க்கந் தேடுவதன்றிச் சங்கத்தை இல்லாதொழித்தல் தவறாகுமெனக் கூறினர்.

ஈற்றில் சபாநாயகர் அன்று நடைபெற்ற விஷயங்களைப்பற்றிச் சிறிது குறிப்புரை கூறியபின், நீராவியடியில் விசுத்த பெருங் களவு விஷயமாக மேற்படி சங்கம் யாதும் செய்யவில்லையென்றும், சட்டநிரூபணசபை, நகர சங்கம், பட்டின பரிபாலன சங்கம் என்னும் இவற்றின் அங்கத்தவராக வருவோர் சனங்கள் முறையிடும் குறைகளைப்பற்றி நன்கு சிந்தித்து அவற்றை நிவிர்த்திசெய்ய முயலும் பெருங் குணமுடையவராயிருத்தல் வேண்டுமென்றும் கூறினர். எனவே இங்கு பேசப்பட்ட விஷயங்களையெல்லாம் நன்கு ஆலோசனைசெய்து பட்டின பரிபாலன சங்கம் வேண்டும் அல்லது வேண்டாம் என்று தீர்மானிக்கும் விஷயம் வரியிறுப்போருடைய பொறுப்பில் இருக்கிறதென முடிவுரை புகன்றனர். மேற்படி கூட்டம் இரவு 7 மணியளவிற் கலைந்தது.

யாழ்ப்பாண நகரபரிபாலன சங்கத் தெரிவு.

எட்டாம் பகுதி.

உங்கள் தற்காலபிரதிநிதியும், நகர கல்விச்சங்க அங்கத்தவரும், தேச ஊழியனுமாகிய

எ. எம். எம். அப்துல்காதிறு அவர்களையே

தயைகூர்ந்து இம்முறையும்

(Mis. 752) **தெரிவு செய்யுங்கள்.**

பட்டின பரிபாலன சங்கம் வேண்டாமாம்.

1-ம் வட்டாரம் முற்றாக அவுத்துவிட்டது.

யாழ்ப்பாணம் பட்டினபரிபாலன சங்கத்தின் வட்டாரங்கள் எட்டினுமுள்ளவர்களும் ஷை சங்கம் விதிக்கும் வரிப்பணத்தை இறுப்பவர்களுமாகிய அநேகர் இச்சங்கம் இதுகாறும் அனுசரித்துள்ள முறைகளினால் இடருற்று, ஆறாத்துயருற்று, வெறுப்புற்று இச்சங்கம் எங்களுக்கு வேண்டாமெனக் கண்டிக்கும்பொருட்டு இந்த நவம்பர்மீ 5-உ வியாழக்கிழமை வண் வேங்கடேசப்பெருமாள் கோவில் வீதியில் ஓர் விசேடசபை கூட்டினர் ஷை சங்கத்தினால் இப்பட்டினவாசிகள் படும் கஷ்டங்களைப்பற்றிப் பலர் ஆத்திரத்துடன் பேசினார்கள்.

அக்கூட்டத்தின் தொடர்பாகச் சென்ற வியாழக்கிழமையும் நிச்சே மண்டபத்தில் ஷைசங்க முதலாம் வட்டார வாசிகளால் ஓர் விசேட சபை கூட்டப்பட்டது. அதிக மழையாயிருந்தமையினால் சனக் கூட்டம் காத்திருந்த அளவுக்குக் குறைவாகவிருந்தது. ஆயினும் அங்குச் சமுகமாயிருந்தோரெல்லோரும் அபிமானத்துடனும் அதிக ஆத்திரத்துடனு மிருந்தனர். மிஸ்டர் ஏ. பீ. தம்பியையா அவர்கள் சபைத்தலைவராகவிருந்தனர். ஸ்ரீ எஸ். சிவசம்பு அவர்கள் காரியதரிசியாகவிருந்தனர். அக்கிராசனர் தமது [illegible]ரம்பப் பிரசங்கத்தில் ஒரு தேசத்தி[illegible]வம் அங்குள்ள உப்பரிகைகள்[illegible] வேலைப்பாடுள்ள மாளிகைகளிலும் [illegible]ற்படை தரைப்படை முதலானவற்றிலும் தங்கியிருக்கவில்லையென்றும், அது அங்குள்ளாரது சங்மார்க்கம் தேசாபிமானம் முதலானவற்றிலேயே தங்கியிருக்கின்றதென்றும் சில கூறியபின், சட்டநிரூபணசபை பட்டினபரிபாலனசபை என்னும் இவற்றின் அங்கத்தவர்களது கொள்கைகளையும் செயல்களையும்பற்றிக் கண்டித்து, இச்சங்கங்களின் அங்கத்தவர்கள் எவரேனும் உண்மையாகத் தாய்நாட்டின் நன்மை கருதியே உழைப்பதாகச் சாதித்தற்கு உரியரல்லரெனக் கூறினர்.

முதலாவதாகச் ஸ்ரீ ஏ. மயில்வாகனமவர்களெழுந்து தாம் முந்திய கூட்டத்திற் பேசிய விஷயத்தைச் சுருக்கமாகக் கூறி, பட்டின பரிபாலன சங்கம் இங்கிருப்பதனால் ஊரவர்களுக்கு உண்டாகும் பேரிடர்களைப்பற்றித் தீர்க்காலோசனை செய்து தீர்மானிக்கும்பொருட்டுச் சபையோரைக் கேட்டுக்கொண்டனர்.

அதன்பின் மிஸ்டர் எல் லோசனவர்கள் இங்குள்ள வரியிறுக்கும் பட்டினவாசிகள் சங்கத்தில் நடைபெறும் விஷயங்களை அறியாமலிருக்கிறார்களென்றும், வரியிறுப்போரின் வசதியின் பொருட்டும் நன்மையின் பொருட்டும் உழையாது தங்கள் தங்கள் கண்ணயமும் வசதியும் கருதிப் பாடுபடுவோரை அங்கத்தவர்களாகத் தெரிந்தனுப்புதல் வரி இறுப்போர்மீதுள்ள குற்றமென்றும், வட்டாரங்கள்தோறும் சபை கூட்டி ஆங்காங்குள்ளாரது சம்மதத்துடன் தக்க அங்கத்தவர்களைத் தெரிந்தனுப்புதலே சிறந்த வழி என்றும், சங்கத்தில் நடைபெறும் கருமங்களைப் பற்றிய வாதம் பிரேரணை முதலானவை தமிழ்ப்பாஷையிலேயே பேசப்படவேண்டுமென்றும், இந்தமுறைகளை இங்குள்ள சங்கம் அனுசரியாதொழியின் இது இல்லாதொழிதலே தக்கதென்றும் கூறினர்.

ஸ்ரீ ஏ சின்னத்தம்பியவர்கள், ஆதியிலே சுகாதாரசங்கம் ஸ்தாபிக்கப்பட்டதென்றும், அது இடையிலே "லோக்கல் போட்" டாக உருமாறியதென்றும், அந்தப் 'போட்'டே இப்

அவ்வர்ச்சுனன் நின்று தவஞ் செய்யுஞ் சாரலியடைந்து அவனைக் கொல்வான் வந்த மூகாசுரனைக் கொன்று காண்டீபனைக் காத்தருளினமையை "மதிசூடி பின்திரிந்து காப்பன்" என்பதற்குத் திருஷ்டாந்தமாகும். அர்ச்சுனன் தவஞ் செய்த காலத்து இடைவிடாது சிவநாமத்தை உச்சரித்தானென்பதனை "பரிந்துவெயில்காள் மழைநாள் பனிநாளென்று பாராமல் நெடுங்காலம் பயின்றான் மண்ணில்—அருந்தவமுன்புரிந்தோரில் இவனைப் போல்மற்றார் புரிந்தார் சிவ சிவ வென்றரியவாறே" என வரும் வில்லிபுத்தூரர் பாரதச் செய்யுளானு முணர்க. (எ)

உலகம் பலவிதம்.

"இராசதுரை சிங்கப்பூர் உத்தியோகமாகான் என்றது மெய்தான்; அவனுக்கு அதிக மதிப்புண்டுதான்; எங்கள் மகளுக்குத்தக்கமாப்பிள்ளையுந்தான்; ஆனால் கலியாணம் முடிந்தவுடனே சிங்கப்பூருக்கு எங்கள் பிள்ளையைக் கப்பலேற்றிவிட்டுக் கலங்கவேண்டிவரும்; இதுவும் ஒரேயொரு பிள்ளை; இதைப்பற்றித்தான் நினைக்கப் பெரிய மனவருத்தமாகவிருக்கிறது; ஏதோ நான் பெண்ணாய்ப்பிறந்தவள் இப்படிச் சொல்லுகிறேனென்று குறை நினையாதீர்கள்; இதைப்பற்றிக் கொஞ்சம் யோசித்துப்பாருங்கள்" என்றாள் மனைவி. "பின்னர், என்னடியப்பா செய்யச் சொல்லுகிறாய்" என்று கேட்டான் புருஷன். "அதல்லப் பாருங்கள்; இப்போது தெரியாது, தங்கச்சி வீட்டைவிட்டுப் போனபிறகுதான் அந்த அருமை தெரியும், உப்பினருமை ஒழிந்தாற்றான் தெரியும்; எதற்காக நாங்கள் எங்கள் ஒரேயொரு குழந்தையைச் சிங்கப்பூருக்கு அனுப்புவது? அவளுக்கென்ன பொருள் பண்டமில்லையா? கட்டப்பூட்ட நகையில்லையா அல்லாமலும் அவள் இலட்சணத்திற் குறைவா? சீர்சிறப்பிற் குறைவா? உடை நடை பாவனையிற் குறைவா? மேலும் நாலு மூன்று பெண் குழந்தைகள் காலோடும் கையோடும் இழுபடுகின்றனவா? வேறு குமர் மூலையிலிருந்து பெருமூச்சுவிடுகின்றதா? நாளைக்கு எனக்கு ஒரு தலையிடியானாலும் அவளல்லாமல் வேறு ஆர் பார்ப்பது. கையிலே வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய் தேடலாமா!' என்னண்ணன் மகன் முருகுப்பிள்ளை உத்தியோகமில்லாவிட்டாலும் நியாயமாகப் படித்திருக்கிறான்; நல்லபிள்ளை; அவனும் மனசில் ஏதோ வைத்துக்கொண்டு எங்களை மிகவும் வேண்டி நடக்கின்றான். அவனுடைய பொல்லாத காலம் அவனுக்கு ஒருமுயற்சியும் வாய்க்கவில்லை; எங்களுக்கு ஒன்றென்றால் அவனுக்குத் துடிக்குமாப்போல் ஊரவருக்குத் துடிக்குமா! அவனுக்குத்தான் உத்தியோகம் எதற்காக; எங்கள் பிள்ளைக்கு அவனைச் செய்து வைத்துவிட்டால் அவன் இந்தக் காணி பூமியையும் பார்த்துக்கொண்டு மாசத்துக்குமாசம் கடை வாடகைகளையும் அறவிட்டுக்கொண்டு நாங்களும் தங்கச்சியும் சொன்னபடி நடப்பான்; இருவருஞ் சந்தோஷமாக ஊரோரடேயிருப்பார்கள்; எந்தநாளும் எங்களுக்கு உதவி; உங்ளாலும் இனிமேல் ஓடியாடிக் கருமம் பார்க்க முடியாது; வருகிறவன் சிங்கப்பூர் உத்தியோகத்தனென்றால் உங்கள் நிலம்புலமெல்லாவற்றையும் யார் பார்ப்பது; நான் தட்டிப்பார்த்த அளவில் தங்கச்சிக்கும் இந்தச் சம்பந்தந்தான் பிரியம்போலத் தெரிகிறது" என்று மனைவி கணவனுக்கு இடைவிடாது தலையணை மந்திரஞ் செபிக்கத் தொடங்கினாள்.

* * *

அவரும் யோசித்துப்பார்த்தார்; பெண்டாட்டி சொல்வதும் ஒருவழிக்குச் சரிபோல் அவருக்குத் தோற்றியது. மகளுக்கும் இதுதான் சம்மதம் என்ற வார்த்தை அவர் மனசில் வேலை செய்யத் தொடங்கியது; அல்லாமலும் அவர் பெண்டாட்டி சொல்லை இதுவரையில் தட்டி நடந்தறியார். "சரி, அப்படியானால் உன்னெண்ணம்போலச் செய்துகொள்" என்றார். மனையாட்டிக்கு உண்டான மகிழ்ச்சியைப் பற்றிக் கேட்பானேன். உடனே இச்செய்தியை மருமகனுக்கு மாமி சொல்லியனுப்பினாள். கல்யாணத்திற்கு ஆகவேண்டிய ஆயத்தங்களனைத்துஞ் செய்தாள். தாலி கூறை மற்றும் விவாகச்செலவுகட் காகிய பணமும் மாமியார் மூலமாகத்தான் மருமகனுக்கு அனுப்பவேண்டியிருந்தது. இனி மாமியார் சொல்லியனுப்பிய மங்கல செய்தியைக் கேட்ட மருமகனுக்கு உண்டான ஆநந்தத்திற்கு அளவில்லை; முருகுப்பிள்ளை பிறவிக்குருடன் கட்பார்வை பெற்றாற்போலவும் நித்திய தரித்திரனுக்குப் புதையலகப்பட்டாற்போலவும் அநந்தனை மகிழ்ச்சியடைந்தார். தனக்கு நேர்ந்த அதிட்டத்தைப்பற்றிச் சிந்தித்து இடையிடையே தனக்குள்ளேயே சிரித்துக்கொண்டார்; கடவுளைப் பன்முறை தோத்திரஞ் செய்தார்; தனது நண்பர்களைக் கண்டவிடத்தில், "தங்கள் மகளை மணமுடித்துக்கொள்ளும்படி அம்மானும் மாமியும் என்னை நெருக்குகிறார்கள்.; என்னசெய்வது, ஒன்றுக்கு ஒன்று; எனக்கும் அது சம்மதந்தான்" என்று முருகுப்பிள்ளை சொல்லிக்கொள்வார். சொந்த மருமகன்தானேயென்ற நியாயம் பற்றி மாமன்வீட்டிற்கும் இடையிடையே சென்று அங்கு ஆகவேண்டியகருமங்களையும் நின்று நடப்பிப்பார். சுருங்கச் சொல்லில் விவாகம் நிச்சயமாகி ஒருமாசஞ் செல்வதற்கிடையில் ஒரு சுபமுகூர்த்தநாள்

திலே ஸ்ரீமதி சுந்தராம்பிகை யம்மாளுக்கும் ஸ்ரீ முருகுப்பிள்ளையவர்களுக்கும் விவாகம் நிறைவேறியது. ஆனால் விவாகச் செலவு முழுவதும் பெண்வீட்டாரைப் பொறுத்ததேயாகும்.

* * *

மணமகனும் மணமகளும் மிக்க மனராம்மியத்தோடு இன்புற்று இனிது வாழ்வாராயினர். மாமனும் மாமியும் மருகன் மீது மிக்க அன்புபாராட்டினர். சுந்தராம்பிகையும் தன் சீதனத்தையிட்டுக் கருவங்கொள்ளாமலும் நாயகனை அலட்சியஞ்செய்யாமலும் புல்லென்றாலும் புருஷன் கல்லென்றாலுங் கணவன் என்றபடிமாக, உத்தியோகமில்லாதவனாக விருப்பவும் தன் நாயகனைப் பேணி நடப்பாளாயினள். அவனது குறிப்பறிந்து நடந்துவந்தாள். ஆனால் முருகுப்பிள்ளையோ "அற்பரானவர்க்குச் செல்வமல்லது பகைவேறுண்டோ" என்றபிரகாரம் தனது பழைய நிலைமையை மறந்து பெண் வழியால் வந்த செல்வத்தையும் மதிப்பையும் தனக்குச் சொந்தமென நினைத்துச் சிறிது விபரீதமாக நடக்கத் தலைப்பட்டார். இதற்கிடையில் மாமனும் மாமியும் கிருகபரிபாலனப்பொறுப்பை (வீட்டுக் கருமங்களை) யெல்லாம் மருமகனிடத்திலேயே விடுத்தனர். நிலம் புலங்களால் வரும் வருவாயையும் கடைவாடகையையும் ஏனைய வரும்படிகளையும் அறவிடுதற்கும் செலவிடுதற்குமாகிய தத்துவத்தை மருமகனுக்கே கொடுத்துவிட்டனர். முருகுப்பிள்ளை பணமறவிடவேண்டியவர்களிடம் அவ்வக்காலங்களிற் சென்று பணத்தை அறவிட்டுவந்தார். அறவிட்ட பணத்தைச் செலவிடுவது எவ்வாறு என்று தன்னளவிலேயே யோசித்தார். சுந்தராம்பிகையின் சீதன வீடு வளவு பழையமாதிரியானது. வீடு பழைய நாற்சார்வீடு. வளவு நாற்பதுபரப்புக்கொண்ட பெரிய வளவாகும். நாற்புறமுமுள்ள வேலிகளுட் சில பனையோலைகொண்டும் முற்புறத்து வேலிகள் கிடுகுகொண்டும் அடைக்கப்பட்டிருந்தன. கிணறு சாஸ்திரப்படி மனைக்குத்தக அமைக்கப்பட்ட கிணறாகும். தண்ணீர் அதிகந் திறமல்ல. வீட்டுக் கொல்லையுள் மா பலா இருப்பை புளி தென்னை கமுகு வாழை எலுமிச்சை தோடை முதலிய மரங்களுண்டு.

* * *

முருகுப்பிள்ளை பொறுப்பிற் கிருகபரிபாலனம் வந்தபின அவர் அந்தப் பழைய வீட்டை யிடித்து நிலமட்டந்திற்காக்கி விட்டுப் புதுமாதிரியாக வீடு அமைத்தற்கு முயற்சிசெய்தார். வளவின் நாற்புறத்துமுள்ள வேலிகளை அழித்துவிட்டு, அவற்றிற்குப்பதிலாக நாற்புறமும் மூன்று முழ உயரத்திற்கு மேற்படாத சுற்றுமதில் கட்டுவதற்கு அஸ்திவாரமிடுவித்தார். நாற்பது பரப்புக்கொண்ட வளவாயினும் அதற்கு ஒரு மலகூடம் அமைத்தல்வேண்டுமென்று ஆராய்ந்தார். பழைய கிணற்றை மூடிவிட்டு நல்லதண்ணீருள்ளதான புதிய கிணறு ஒன்று வீட்டின் முற்புறத்தில் அமைப்பிக்கத் தொடங்கினார். வளவின் ஒருபுறத்தே நான்கு பரப்புக்கொண்ட நிலத்தில் நின்ற மா பலா இருப்பை முதலிய மரங்களைத் தறிப்பித்துவிட்டு, தானும் சுந்தராம்பிகையும் மாலைக்காலத்தும் நிலாக்காலத்தும் உல்லாசமாக விருந்து பொழுதுபோக்குவதற்காக ஒரு பூந்தோட்ட மமைத்தல்வேண்டுமென்றார். கொழும்பிலுள்ள செல்வர்களுடைய வீடுகளில் செய்யப்படுவதுபோல தன்னுடைய வீட்டினும் இதுகாறுமிருந்த தீபங்களை அகற்றிவிட்டு மின்சாரவெளிச்சம் வைத்தல்வேண்டுமென்றார். வீட்டிலே நெடுங்காலமாக இரு வேலைக்காரர்கள் இருந்தார்கள். அவர்களில் ஒருவன் தருந்தவனல்லவென்று சொல்லி அவனை விடுத்துக் கொச்சிச் சிறுவனொருவனை வேலைக்காரனாக வமைத்தார். மற்ற வேலைக்காரன் ஏதோ பொய் சொல்லிவிட்டானென்று அவனையுந் தூரத்திவிட்டார். வேலைக்காரர் இருவரையும் நீக்க முயன்றபோது முருகுப்பிள்ளையின் மாமனும் மாமியும் "இவர்கள் பழையவர்கள், நெடுங்காலமாக இங்கே நின்றவர்கள், இவர்களை நீக்குவது சரியல்ல" என்று சுந்தராம்பிகை மூலமாக மருமகனுக்குச் சொல்லி அனுப்பினர். ஆனால் அவர்கள் வார்த்தையை முருகுப்பிள்ளை பொருட்படுத்தவில்லை.

* * *

வேலைக்காரரை நீக்கியவிஷயமாக முருகுப்பிள்ளைமீது மாமனுக்கும் மாமிக்கும் வெறுப்புண்டாயது. பழைய வீட்டை இடிக்கவேண்டாமென்றும், கிணற்றை மூடவேண்டாமென்றும், சுற்றுமதில் இப்பொழுது தேவையில்லையென்றும், மின்சார வெளிச்சம் போடவேண்டாமென்றும் மகன்மூலமாக மருமகனுக்கு மாமனார் சொல்லியனுப்பினர். சுந்தராம்பிகையும் இவைகள் வேண்டாமென்று தன்னுயிருக்குப் பலமுறைகளிலுஞ் சொன்னாள். முருகுப்பிள்ளை மனையாள் சொல்லையாவது, மாமன் மாமி வார்த்தையையாவது கேட்கவில்லை. "அவர்கள் எனக்கென்ன சொல்வது, கோழியைக் கேட்டா ஆணங் காய்ச்சுவது, என்னசெய்யவேண்டுமென எனக்குத் தெரியாதா, நான் இன்னமுஞ் சிறுபிள்ளையா" என்று சுந்தராம்பிகையோடு முருகுப்பிள்ளை நியாயம்பேசத் தலைப்பட்டார். மேலும் முருகுப்பிள்ளை மாமன் மாமியாருடைய தேவைகளை யிட்டுச் சிந்திப்பதில்லை. அவர்கள் காணிபூமி வருமானங்களையெல்லாம் தன்னிடத்தில் ஒப்பித்துவிட்டபடியால், உணவுக்கு உடைக்கு என்னசெய்வார்கள் என்பதைப் பற்றித்தானும் முருகுப்பிள்ளை நினைப்பதில்லை. தன் மனையாளின் விஷயத்திலும் இவர் அலட்சியந்தான். மனையாளின் சீதனமாயுள்ள நிலம் புலங்களின் வருவாயில் ஒருபகுதிப் பணத்தை முருகுப்பிள்ளை வட்டிக்குக் கொடுத்து விருத்திபண்ணி வரலாயினர். சுந்தராம்பிகைக்கும் நாயகன்மேல் மெல்லமெல்ல வெறுப்புத்தொட்டது. விவாகஞ் செய்து மூன்றுவருடமாகியும் புத்திரப்பேறும் இவர்களுக்கில்லை.

* * *

மாமனார் மாமியை ஒருநாள் பார்த்து, "எங்கள் மருமகனுடைய காரியம் கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டாற்போலிருக்கிறது; நீதானே, இவனை எங்கள் பிள்ளைக்கு முடித்துவைக்கவேண்டுமென்றாய்; எங்கள் பிற்காலத்தில் இவன் உதவியாக இருப்பான், கிடைதலைக்குஉதவுவான்என்றாய்; இப்பொழுது பார்த்தாயா அவன் செயலை; உன்னைக் குற்றஞ் சொல்வதில் என்ன பிரயோசனம்; பெண்புத்தி கேட்டிடும் பேதையும் பதரே என்றவாறு உன் புத்திகேட்ட நானல்லவா பெரிய மூடன்" என்று சொல்லி மனவருத்தப்பட்டார். "ஐயோ, நான் என்னசெய்வேன்; எனக்குத் தெரியுமா இவன் இப்படிச் செய்வானென்று; இவன் பார்த்தாற் பசு பாய்ந்தாற் புலியென்றமாதிரியல்லவா இருக்கிறான்; நாம் ஒன்றை நினைக்கத் தெய்வம் ஒன்றை நினைத்தது. வேலிக்கிட்ட முள் காலிற் தைத்தாற்போல் இருக்கின்றது; எங்கள் பிள்ளைக்கு இந்த மூன்றுவருட வாழ்க்கையும் போதும்; அவள் எங்களோடு இருக்கட்டும், இவனை இங்கே வரவேண்டாமென்று சொல்லுவோம்; பொன்னின்கத்தியென்று வயிற்றிலே குற்றிக் கொள்வதா" என்றார். மாமனார் "அப்படியல்ல, இன்னும் பார்ப்போம், வேறு யாரையுங்கொண்டு புத்தி சொல்லுவிப்போம்; எடுத்தாப்போல் வேண்டாமென்று சொல்லிவிடக்கூடாது, கொஞ்சம் பொறு" என்றார். மனைவியுஞ் சிறிது சமாதானமடைந்தாள். முருகுப்பிள்ளையினுடைய நிலைமையிலேதான் எங்கள் பட்டின பரிபாலன சங்கம் இப்பொழுது இருக்கின்றது. பட்டினவாசிகள் முருகுப்பிள்ளையின் மாமன் மாமி சுந்தராம்பிகையம்மாள் என்னும் இவர்களுடைய நிலைமையில் இருக்கின்றனர்.

காலநிலை.

சில நாட்களாக அதிக மழை பெய்கின்றது. குளிர் அதிகம்.

வரியிறுப்போரின் விசேடகூட்டம்.

யாழ்ப்பாணப்பட்டினபரிபாலனசங்கத்தின் எட்டு வட்டாரங்களிலும் வரியிறுப்போரின் விசேடகூட்டமொன்று நாளைப் பிற்பகல் ஐந்துமணியளவில் வண் வேங்கடேசப் பெருமாள் கோயிற் சந்நிதியில் நடைபெறும்.

அமெரிக்காவிற் புகைரத விபத்து

சென்ற வெள்ளிக்கிழமை அமெரிக்காவிலே ஒரு மணித்தியாலம் ஐம்பதுமைல் விரைவேகமாக ரியூயோக்குக்குச் சென்ற புகைரதத்தொடர் வேறொன்றுடன்மோதியமையினாற் பிரயாணிகளிற் பெரும்பான்மையரானோர் படுகாயப்பட்டனர். பதினொருபேர் மாண்டனர்.

யாழ்ப்பாணப் பட்டினபரிபாலன சங்கத் தெரிவு.

இச் சங்கத்தின் 8ம்வட்டாரத்திற்கு

கூப்பிறிங்கோட்டுத் தரணியும் பிரசித்தநோத்தாரிசுவும் அரசியல்ஞானமுடையவரும் வாக்குச்சாதுரியம்வாய்ந்தவருமாகிய

எஸ். எம். அபூபக்கரவர்களையே

உங்கள் பிரதிநிதியாக அபிமானித்துத்

தெரிவு செய்யுங்கள்.

(Mle. 747.)

மேல்நாட்டுக் கன்னிகை

மகாத்மா காந்தியின் சிஷ்யை.

அட்மிறல் சேர் எட்வேட் சிலேட் என்பவரின் புத்திரியாகிய மிஸ். மடலீன் சிலேட் என்னும் கன்னிகை ஆமதபாத்தில் மகாத்மா காந்தியின் சபர்மதி ஆச்சிரமத்தை அடைந்து கதர் உடை தரித்து நூல்நூற்கப் பயின்றுவருகின்றனர்.

நீதிஸ்தலத்தில்கஞ்சாக்குடித்தவன்.

கொழும்புப் பொலிஸ்நீதிபதிக்கு அனுப்பிய ஒருமனுவைப்பற்றி விசாரணை செய்யும் பொருட்டுப் பொலிஸ் கோட்டுக்குச் சென்ற பீர்சாஎன்னும் நடுத்தரவயதுள்ள மகமதியன்ஒருவன் கோட்டுவீட்டிற்றானே கஞ்சாவைப் புகையிலைக்குள் வைத்துச் சுருட்டிக்குடித்தானெனக் குற்றஞ்சாட்டப்பட்டு, இருபதுரூபா அபராதம்விதிக்கப் பெற்றான்.

சாராயமென்று நச்சுப்பதார்த்தத்தை அருந்தியமை.

சென்றவாரம் ஹொறனவுக்குச் சமீபமாயுள்ள உடுவா என்னும் கிராமத்திலே பொடிநோனா என்னும் நாற்பத்தைந்து வயதுள்ள ஒரு பெண் வயிற்றிலுள்ள சுகவீனத்தை நீக்கும்பொருட்டு நச்சுத் திராவகத்தைச் சாராயமெனக் கருதி உட்கொண்டு ஆபத்தானநிலையில் வைத்தியசாலைக்குக் கொண்டுபோகப்பட்டனள்.

அவுஸ்திரேலியமோட்டர்வண்டிப் பந்தயம்.

ஒருவர் இறந்தனர்; பலர் காயப்பட்டனர்.

சிலநாட்களுக்குமுன் அவுஸ்திரேலியாவிலே மோட்டர் வண்டிப் பந்தய ஓட்டம் நடைபெற்றது. அப்பொழுது ஓர் மோட்டர்வண்டி ஒருமணித்தியாலம் எழுபதுமைல் விதிதமாகச் சனங்களுக்கிடையில் ஓடி ஒருவரைக் கொன்றது; இருபத்தைந்து பேரைப் படுகாயப்படுத்தியது.

மகமதியச் சிறுவனின் ஆண்மையற்ற அக்கிரமம்.

நாவலப்பிட்டியிலே சிலநாட்களுக்குமுன் அப்தூல்கமீத என்னும் பதினாறவயதுள்ள வாலிபன் ஒருவன், தனது கடைக்குச் சில உணவுப் பொருள் வாங்கச் சென்ற ஒருமகமதியப்பெண்ணுடன், பொருளின் விலைகாரணமாக எழுந்த வாக்குவாதத்தினாற் கலகமிட்டு அப்பெண்ணை வாருக அடித்துக் காயப்படுத்தினன். அப்பெண் உடனே வைத்தியசாலைக்குக் கொண்டுபோகப்பட்டனள்.

சேர். ஹறி பிறிற்றன் இந்தியாவின் நிலைமையை அறிய வந்திருக்கிறார்.

இங்கிலாந்திலுள்ள பாராளுமன்ற அங்கத்தவருள் ஒருவராகிய சேர் ஹறி பிறிற்றன் அவர்கள் அவுஸ்திரேலியாவிலிருந்து இங்கிலாந்துக்குச் செல்லும் மார்க்கத்தில் கல்கத்தாவில் இறங்கி இந்திய இராசப் பிரதிநிதியுடன் வசிக்கின்றனர். அவர் சில வாரம் இந்தியாவிற்றங்கி அங்குள்ள அரசியல்வியாபாரம் என்னுமிவற்றின்நிலைமையைப்பற்றி அறிந்துகொண்டு இங்கிலாந்துக்குப் புறப்படுவர்.

பாவ்லா கொலை வழக்கு.

மரணதண்டனை

இன்னமும் நிறைவேற்றப்படவில்லை.

பவ்லாக் கொலைவழக்கிற் சம்பந்தப்பட்ட எதிரிகள் மரணதண்டனை விதிக்கப்பட்டு ஓமர்காத்திறைச்சாலையில் அடைபட்டிருக்கின்றனர். அவர்களைத் தூக்கிக் கொல்லுதற்குரிய அனுமதிப் பத்திரம் இந்தியகாரியாலயத்திலிருந்து இன்னமும் வரவில்லையாம். மரணதண்டனை விதிக்கப்பட்ட சிறையாளர் இருவரும் விடுதலை பெறும்பொருட்டு மாட்சிமைதங்கிய சக்கரவர்த்தியவர்களுக்கு இந்த நவம்பர்மீ 2உ மனுப்பண்ணியிருக்கின்றனர்.

உக்கிரமான புயல்.

அறுபது மீன்பிடி வள்ளங்கள் மூழ்கின.

சென்றவாரம் இந்துசமுத்திரக் கரையில் உக்கிரமான புயல் அடித்தமையினால் மீன்பிடிக்கச் சென்ற அறுபது வள்ளங்கள் கடலுள் மூழ்கின. அதிக பொருள்கள் அழிந்தன. அநேகர் மாண்டனர். அறுபதாறு பேர் உயிர் பிழைத்தனர்.

படுமரமனைய பாவியின்செயல்.

சென்ற வெள்ளிக்கிழமை காலிக்குச் சமீபமாயுள்ள அகங்காமம் என்னும் கிராமத்திலே அகிறிஸ் என்னும் ஒருவன் தன் அயலிலுள்ள ஹிறிஸ் என்பவனின் ஈனும் பருவமடைந்த ஒரு பசுவைக் கத்தியினால் வயிற்றில் வெட்டிப் படுகாயப்படுத்தினன். வெட்டுக்காயத்தினூடாகப் பசுவின்கன்று தெரிகிறதாம். குறித்த பாதகன்மீது காலிப் பொலிஸ் கோட்டில் வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது. பசுவின் பால்விஷயமாக எழுந்த கலகமே இந்த நீசனுடைய செயலுக்குக் காரணமாம்.

கடமைபார்த்த பொலீசைக் கொண்டோடிய மோட்டர் பஸ்.

காலியிலே ஜயசூரியா என்னுமொரு மோட்டர் பஸ் வண்டிச் சாரதி தன் வண்டியை ஓட்டிச் சென்றபோது, வழியிற் கடமை பார்த்து நின்ற பொலிஸ் ஒருவர் அனுமதிப் பத்திரத்திற் குறிக்கப்பட்ட தொகைக்கு அதிகமாகப் பிரயாணிகள் இருக்கக்கூடுமென்னும் சந்தேகத்தினால் வண்டியை நிறுத்தும்படி கைகை காட்டினர். வண்டி நின்றவுடன் பொலிஸ் அதனுள் ஏறி அனுமதிப்பத்திரத்தைக் காட்டும் பொருட்டுச் சாரதியிடம் கூறினர். சாரதி அப்பத்திரத்தைக் கொடாது வண்டியை ஓட்டினன். வண்டியை நிறுத்தும்படி பொலிஸ் பன்முறை கூறியும் வாய்க்கவில்லை. சாரதி மகாமோதறை வைத்தியசாலைவரையும் வண்டியை அதிவேகமாக ஓட்டிச் சென்று அங்கே நிறுத்தினன். இச்சாரதிமீது காலிப் பொலீஸ் கோட்டில் வழக்குத் தொடரப்பட்டது. சாரதி எதிரிக்கு ஐம்பது ரூபா அபராதம் விதித்தனர்.

காதைக்கடித்த காதலி.

வாய்க்காரிவிழுங்கிவிட்டாள் போலும்.

காலிக்குச்சமீபமாயுள்ள நகொடா என்னுமிடத்திலே உப்பாறிஸ் என்னும் ஒருவன் ஜனிநோனா என்னும் ஒருபெண்ணை வைத்திருந்தான். அவ்வாய்க்காரியுடன் காலங்கழிக்கமுடியாத உப்பாறிஸ் சிலகாலமாக அவளைவிட்டுப் பிரிந்திருந்தான். ஆயினும் அவள் அவனைச் சந்திக்கும் காலங்களிலெல்லாம் அவனுடன் தர்க்கிட்டுவந்தனள். அவள் ஒருமுறை அவனுடைய கையிற்கத்தியினாற் குற்றினள். சென்ற சனிக்கிழமை இந்தநோனா அவனுடைய கையிற்பிடித்து இழுத்து அவனது இடது காதையும் கடித்து விட்டாள். கடித்து எடுக்கப்பட்டகாதையும் காணவில்லையாம். வாய்க்காரி விழுங்கிவிட்டாள்போலும். அவள்மீது காலிப்பொலிஸ்கோட்டில் வழக்குத்தொடரப்பட்டது. குறித்தவழக்காளி தனது மனைவிதனென்றும் தனக்கு இதைப்பற்றி யாதொன்றும் தெரியாதென்றும் கூறினள். நீதிபதி வழக்காளியின் காது எவ்விதமாகக்கடிக்கப்பட்டதென்று கேட்டபோது அவள் தனக்கு அதைப்பற்றிச் சொல்லத்தெரியாதென்றனள். நீதிபதி அவளைப் பிணையில் விட்டிருக்கின்றனர்.

ஐரோப்பியருக்கு நஞ்சூட்டியமை

அசெம் என்னுமிடத்திலே டிபுறசாடியாப் புகைரதவேலைத்தலத்தில் மேலுத்தியோகத்தராகவிருக்கும் அயிரோப்பியர் அறுவருக்குச் சிலநாட்களுக்குமுன் கல்கத்தாவிலுள்ள வியாபாரிகள் சிலர் ஓர் அறிவித்தற்கடிதம் அனுப்பினார்கள் அக்கடிதத்தில் "சொக்லேற்" என்னும் சில உணவுப்பொருள்களும் உவன் என்னும் குடிவகையும் மாதிரிபார்ப்பதற்கு அனுப்பப்பட்டிருக்கிறதென வரையப்பட்டிருந்தது ஷைபொருள்கள் பொதியப்பெற்றபெட்டி தக்க காலத்தில் ஐரோப்பியரிடம் வந்து சேர்ந்தது. அந்த உணவுப்பொருள்களிற் சிலவற்றை உண்ட ஆறு ஐரோப்பிய உத்தியோகத்தரும் மூன்று பெண்களும் திடீரென நோய்வாய்ப்பட்டனர். குறித்த பெட்டியில் டிபுறக்காடு விலிருந்து எட்டுமைலுக்கு அப்பாலுள்ள ஒரு தபாற்கந்தோரின் முத்திரை பொறிக்கப்பட்டிருந்தது. ஷை புகைரதப்பகுதியிற் கடமைபார்த்து விலக்கப்பட்ட ஒரு துங்கில இந்தியரும் இரண்டு இந்தியரும் சந்தேகத்தின்மீது பிடிக்கப்பட்டிருக்கின்றனர்.

தேகவியோகம்

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித் தலைமை உபாத்தியாயரும் ஆங்கில இந்துசாதனப் பத்திரிகாசிரியருமாகிய ஸ்ரீ. மு. சபாரத்தினசிங்கமவர்களின் முன்றாவது புதல்வியாகிய முத்து மணி யென்னும் பெண்குழந்தை நேற்று மாலை ஐந்தரைமணி வரையில் தேகவியோகமானதென்னும் துக்க சமாசாரத்தைக் கேள்விப்படலானேம். இச்சீமாட்டி இறக்கும் போது வயசு முன்றரை. காத்திராப்பிரகாரமாக, ஸ்ரீ. சபாரத்தினசிங்கமவர்களின் துயரம் பத்தாநாந்த நேர்ந்த இவ்விபத்தாற் பெரிதும் பரிதாபப்படத்தக்கதாம்.

ராட்டினத்தால் ஆவது மற்றொன்றால் ஆகாது.

ஓர் அமெரிக்கரின் அபிப்பிராயம்.

(முற்றொடர்.)

ராட்டினம் மனதுக்கு சந்தோஷத்தையும் தருகின்றது. நகர வாசிகளுக்கு இதன் உண்மை இலகுவில் விளங்காது. கிராமங்களில் சென்று பாருங்கள். நூற்றும் பெண்களின் முகத்தைப் பாருங்கள்; அவர்களுடைய உற்சாகத்தைப் பாருங்கள்; நெசவாளர்களின் முகத்திலுள்ள சந்தோஷக் குறிகளைக் கவனியுங்கள். ராட்டினத்தின் மஹிமை என்னவென்று அவர்களைக் கேட்டாலல்லவோ தெரியும்? குருடனுக்குச் சூரிய வெளிச்சத்தின் அழகு தெரியாது. தரித்திரர்களை ஆனந்தக் கூத்து ஆடும்படி சொன்னால், அது எப்படி வரும்?

"தன்னுயிரைக் காத்துக்கொள்ளப் பயிற்சி பெறுவிடில் வாழ்வில் சுகமில்லை; ஒவ்வொருவருக்கும் தேவைகள் இருக்கின்றன; அத்தேவைகளை அவரவரே பூர்த்தி செய்துகொள்ள நமது கல்வி முறை வழி காட்டவில்லை; சாக்தியும், சுய நம்பிக்கையும் ஸ்வாதீன உணர்ச்சியும் அதனால்தான் இல்லை" என்று கவிசிரேஷ்டர் ரவீந்திரநாத் டாகூர் விசுவபாரதி சஞ்சிகையில் எழுதியிருக்கிறார். ராட்டினத்தின் மூலமாக அந்த சக்தியையும் ஆனந்தத்தையும் அனுபவிக்கக்கூடாதா?

நூற்பதே சாந்தமயமான தொழில்; ராட்டினத்தில் நாதமும் அதற்குத் துணையாகவிருக்கின்றது. அந்த இனிய நாதத்தை என் கேட்டு அனுபவிக்கலாகாது? அஹிம்சையே உருவாகக் கொண்டது ராட்டினம்.

உலகத்தில் நடக்கிற சண்டையெல்லாம் ஜாதிச் சண்டை அல்லது வகுப்புச் சண்டைதான்; பிறர் செல்வத்தைச் சூறண்ட ஆசை கொண்டால் சண்டை ஏற்படுவது லகஜம்; பயமும் பகைமையும் ஆத்திரமும் தவேஷமும் அகுயையும் தாண்டவமாடுவது இயல்பு. ராஜ தந்திரிகளும் அர்த்த சாஸ்திரிகளும் சரித்திர ஆசிரியர்களும் இதை ஒப்புக் கொள்ளுகிறார்கள். 500 வருஷமாக பிரிட்டிஷார் நடத்தி வருவதெல்லாம் வியாபார யுத்தங்கள்தான்; மகா யுத்தத்திற்குங் காரணமும் அதுதான். இவைகளை முறையே ஆசிரியர் லீக்லியும் பிரஸிடெண்ட் வில்ஸனும் பஷீரங்கமாகச் சொல்லியிருக்கிறார்கள்.

நிலைமை இங்ஙனமிருப்பதால், சமஸ்த ஜனங்களும் ராட்டினத்தைக் கையாண்டு கதர் உடுப்பதன் மூலமாக சமாதானம் ஏற்படுவது தரிதப்படும். பிறர் சூறண்டுவதற்கு இடமில்லாமற் செய்து விட்டால் அப்புறம் சண்டை ஏது? எஜமானர்கள் ஏது? தொழிற்சாலைத் தொல்லை ஏது? அன்னியத் துணிகள் விற்க இடமேது? இந்தியாவுக்குத் துணியனுப்பும் மற்ற நாடுகளிலும் தொழிற்சாலைக் கஷ்டங்கள் குறையும். ராட்டினத்தின் மூலமாக இந்தியா தன்னைக் காப்பாற்றிக் கொள்வதோடு, பிறநாடுகளில் கஷ்டப்படுவோரின் துன்பத்தை நீக்கும். மூலப் பொருள்கள் ஆங்காங்கு செலவாகாமல் ஒரு மூலையிலிருந்து இன்னொரு மூலைக்கு ஏற்றியனுப்புவதால் ஏற்படும் தொல்லைகள் தொலைந்து போம்.

ஒரு பெரிய வாடிக்கைக்காரர் போய்விட்டால் அவர் மூலமாக ஏற்பட்ட போட்டியும், அன்னியநாட்டு ராஜதந்திரிகள் வியாபாரிகள் முதலியோருக்குள் ஏற்பட்டுவந்த சச்சரவுகளும், குறைந்துவிடும். அனாவசியமான போட்டா போட்டிகளுக்கு இடமிராது. கதர் இயக்கம் வெளிப்பார்வைக்கு இந்தியப் பிரச்னை போல் தோன்றக்கூடுமாயினும், ஸர்வதேச சமாதானத்துக்கு அதன் மூலமாக இடமேற்படுமென்பதைக் கவனிக்க வேண்டும். வியாபாரம் சம்பந்தமான புள்ளி விவரங்களைப் பார்த்தால் இது தெரியவரும்.

"இதெல்லாம் கொள்கையளவில் நன்றாகத் தானிருக்கிறது. ஆனால் கதர் இயக்கம் செல்வ நிலையை விருத்தி செய்யும்" என்று சிலர் கேட்கக்கூடும். 'ஆம்' என்று நான் சந்தேகமறச் சொல்வேன். ஒரு பெரிய தொழிற்சாலைக்குப் பதிலாகப் பலவிடங்களில் சிறிய தொழிற்சாலைகளை அமைப்பது தான் உத்தமமென்று அமெரிக்க கோமகேச்வராகிய ஹென்றிபோர்டு என்றவர்கூட முடிவுக்கு வந்திருக்கிறார். சிறிய கிராமங்களிலும், பட்டணங்களிலும் அவர் பண்டங்களை உற்பத்தி செய்ய ஆரம்பித்திருக்கிறார். மகாத்மாஜி இன்னும் ஒரு அடி முன்வைத்துத் தமது திட்டத்தை நடத்தப் பார்க்கிறார். ஓரிடத்தில் உற்பத்தியாகும் சரக்கு பலவிடங்களில் உற்பத்தியாகும் படியும், மூலப்பொருள்கள் ஒரேயிடத்தில் சேகரமாகாதபடியும், ஆங்காங்கு உற்பத்தியாகும் சரக்கு அந்தந்த விடங்களிலேயே விநியோகமாகும்படியும் அவர் செய்ய விரும்புகிறார். இதனால் வீண்செலவும், பணநஷ்டமும், குறைகின்றது. அமெரிக்காவில் பருத்தியை ஒரேயடியாக சேகரித்து, ரெயிலிலும் கப்பல்களிலும் தேசம் விட்டு தேசம் கொண்டுபோய், அங்கு தொழிற்பண்டங்களாக்கி, அங்கிருந்து ஆயிரக்கணக்கான மைல் தூரம் மறுபடியும் வந்து, இந்தியாவில்விற்றுமதிலாபமடைவதென்றால் அதன்னை நிரமம், எவ்வளவுசெலவு, எவ்வளவு நஷ்டம் என்பதை யோசித்துப் பாருங்கள். தரகு, இன்ஷூரன்ஸ், டிடக்குக் கூலி எவ்வளவு ஆகிறதென்று பாருங்கள். வருஷத்துக்கு 6 மாதம் அல்லது 3 மாதம் கோடிக்கணக்கான இந்திய மக்கள் வேலையில்லாமல் திண்டாடுவதைச் சற்று நினையுங்கள். அந்த மாதங்களுக்கு உற்பத்தியாகிற பருத்தியைக் கொண்டு கிராமந்தோறும் நூற்பதால் ஏற்படக்கூடிய அனுகூலங்களையும் இதோடு ஒப்பிட்டுப் பாருங்கள். எது சிக்கனமான புத்திசாலித்தனமான முறையென்பது புலப்படாமற் போகாது.

இந்தியாவுக்கு வேண்டிய துணிகளை இந்தியர் உற்பத்தி செய்து கொள்ள முடியாமலிருப்பதால் ஸர்வ தேசச் சண்டைகளுக்கு அது ஒரு காரணமாயிருக்கிறது; பல தேசங்கள் யுத்த ஸன்னத்தமாவதற்கு அது துண்டு கோலாயிருக்கிறது. இந்தியர் நம்மால் என்ன ஆகக்கிடக்கிறது என்று ஏக்கம் பிடித்து, நிர்க்கதியாகி விட்டதாக நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் இந்தக் கதரிலும் ராட்டினத்திலும் திடமான நம்பிக்கை வருகிற வரையில் அந்தக் கையாலாகாத்தனத்துக்குக் காரணமாயிருக்கிற மனோபாவம் நீங்கப் போவதில்லை. இந்தியர் பலஹீனமாயிருப்பதால் இந்தியாவைச் சூறண்டுவதற்கு மேனாட்டார் நீ நான் என்று போட்டி போடுகிறார்கள். இந்தியாவின் செல்வத்தை அன்னியர் சூறண்டுகிறார்களே யென்று ஆத்திரப்படுவதால் மட்டும் பயனில்லை. சூற்றம் இந்தியரிடத்தில் இருக்கிறது.

நிக்கற்று இருப்பதாக நினைக்கும் இந்தியர் தங்களைக் காப்பாற்றிக்கொள்வதோடு உலகத்தினரைக் காப்பாற்றவும் இந்தியாவால் முடியுமென்று நான் சொல்லுவது கேலியாகப்படலாம். ஆனால் உண்மை அதுதான். தெரியமாக வேலைசெய்யவேண்டும். இந்தியாவுக்குக் காத்திருக்கிற மேலான லட்சியத்தை அறிந்து கொண்டுவிட்டால், மிகக் கேவலமான அந்தஸ்திலுள்ள விதவையும் துள்ளிக் குதிப்பாள். விதவைகள் மாத்திரமன்றி கோடீச்வரர்களுக்கும் அது உற்சாகத்தையுண்டுபண்ணும்; வேலையில் ஒரு மதிப்புஞ் சிரத்தையும் உண்டாகும். ஏசுநாதர் கூறியதுபோல் "பரமசாத்வீகிகள் உலகத்தை யாளுவார்கள்".

இந்தியாவில் பல மதத்தாருக்குள்ளும் இப்போது சச்சரவு நடக்கிறது. வர்த்தகமுங் கைத்தொழிலும் ஆங்காங்கு பிரிந்துபோய், அந்த ஊரார் கவலையற்று வாழ்வதென்று வந்துவிட்டால், ராஜீயத்துறையிலும், சமூகவாழ்விலும், அதிகமான போராட்டத்திற்கு இடமிராது. பயம் அகுயை முதலியவை குறைந்துவிடும். உள்நாட்டுச் சமாதானத்துக்கு வழிபிறக்கும்.

ஆகவே கதர் இயக்கம் சமாதானத்தை உண்டுபண்ணுவதற்கு ஒரு கருவியென்று கூறுவது மிகைபடக் கூறியதாகாது. இந்தியா சுயிச்சமாயும், சமாதானமாயுமிருந்தால் உலகசமாதானத்துக்கு அது வழி திறந்துவிடுவது லகஜம். ராட்டினமாகிய ஒரு ஜடப்பொருளின் உதவியால் இந்தியாவுக்குப் பாரமார்த்திகத் துறையில் விடுதலை கிடைப்பதோடு, உலகத்தாரும் சமாதானமாக வாழ்வார்கள். சமாதானத்தை யுண்டுபண்ணுவோர்தான் உண்மையில் பெரியவர்கள். உலக வர்த்தகத்தில் கலந்து கொள்ளாமல் தனித்து வாழ்வது சுயகுலையல்ல வரவென்று சிலர் நினைக்கக்கூடும். [illegible] பணங்கொடுத்து சினேகஞ் செய்து கொ[illegible] முடியாது; பகைவர்கள்தான் அதிகரிப்பர்; ஞானோபதேசந்தான் நண்பர்களைப் பெருக்க வழி. (வரும்) —"சுதேசமித்திரன்"

பத்திரிகாபிமானிகள் தங்களால் வரவேண்டிய பத்திரக் கிரயத்தைத் தயைசெய்து காலதாமசமின்றி அனுப்பிவைப்பார்களாக.

"சேலம் பனியன்கள்."

உறுதியானது விலைசரசம்.

நாட்பட உழைக்கக்கூடியது.

வியாபாரிகளுக்குத் தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

தேவைக்கு அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

ரூயல் நிட்டிங் பேக்டரி,
செவ்வாய்பேட்டை, சேலம்,
(H. 40.) S. இந்தியா.

புதிய தினுசுகள் சகாய விலைகள்

நூதனமான பட்டு ஜவுளிகள்.

எங்களிடம் தற்காலம் நாகரிகத்திற்கேற்ற பனாரிஸ், பெங்களூர், சேலம், கோயம்புத்தூர், கொர்னூடு, காஞ்சீபுரம், கும்பகோணம், தஞ்சாவூர், பாடிப்பேட்டை, பட்டணம், பாரிஸ் பட்டு முதலிய தினுசுகளில் கத்தமானபட்டுச்சேலைகளும் ஜரிகைநூல் சேலைகளும், பட்டுச்சரிகைச் சால்வைகளும் தினுசுகளும் தயாராயிருக்கிறது.

ஒருதடவை வரங்கிப் பார்த்தால் அதின் நயம் தெரியும். வெளியூர் ஆடர்கள் வி. பி. மூலமாக அனுப்பப்படும்.

பி. ஆர். அனந்தநாராயணய்யர்,
ஜவுளி வியாபாரம்,
205, செட்டித்தெரு,
கொழும்பு.

P. R. Ananthanarayana Iyer,
Silk & Cloth Merchant,
205, Sea Street,
(Y. 39) COLOMBO.

அடைவுநகைவிற்பனவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக்கட்டளைச் சட்டத்தின்படி லைசென்சுபெற்று அடைவு பிடிக்கும் யாழ்ப்பாணம் வண்-கிழக்கு பெ. அ. சி. மு. அரு. அருணாசலஞ்செட்டியாரிடம் அடைவுவைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி ஷை சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

1924ஆ ஆகஸ்ட்மீ

நம்.	தி.	க.	ரூ,	பெயர் ஊர் நகைகளின்விபரம்.
1969	28	13		மானிப்பாய் கந்தையா தம்பையா பொன் சிகில்மோதிரம் 2
1974	29	45		கொக்குவில் கிழக்கு வேலுப்பிள்ளை சின்னத்துரை பொன் சங்கிலி அட்டியல் 1 கவுத்தோல் 1 அக்ஷரக்கூடு 1
	செப்டெம்பர்			
1992	2	55		சுண்டிக்குளி நாகலிங்கம் சின்னத்துரை பொன் இமிற் கல்பதக்கத்துடன் சங்கிலி அட்டியல் 1
2009	3	10		கொக்குவில் முருகேசு தம்பையா பொன் சிகில்மோதிரம் 1 அரும்பு தடை 2
2013	4	100		சுண்டிக்குளி செல்லர் இரத்தினம் பொன் பட்டணங்காப்பு சோடி 1 இருதயம் ஒன்றுடன் சங்கிலி 1
2026	6	18		நீர்வேலி கந்தர் விசுவலிங்கம் பொன் கொண்டைப்பூ 1 மனுக்கன் சிகப்பு முருகு சோடி 1
2035	7	13		மானிப்பாய் கந்தையா தம்பையா பொன் கவுத்தோல் 1
2039	7	60		காரைதீவு சின்னத்தம்பி தம்பையா பொன் குண்டுச்சங்கிலி 1
2059	9	150		வண்மேற்கு கணபதிப்பிள்ளை குணமாலை பொன் கொலுசுக்காப்பு சோடி 1 பட்டணங்காப்பு சோடி 1
2077	12	170		சுண்டிக்குளி மூத்ததம்பி நாகலுதி பொன் சம்பளுவளையல் 3 கொலுசுக்காப்பு சோடி 1
2089	15	58		வண் கிழக்கு பண்டாரம் நாகம்மாள் பொன் கம்பிப்பூரானட்டியல் 1 சிகப்புக் கல் தோடு சோடி 1
2095	16	13		கொழும்புத்துறை குமாரசாமி பாராசிங்கம் பொன் பிள்ளைக்காப்பு சோடி 1
2110	17	50		வண்கிழக்கு நாகமுத்து பொன்னுத்துரை பொன் பட்டணங்காப்பு சோடி 1
2126	20	150		வண்கிழக்கு தம்பர் செல்லையா பொன் இமிற். கல் பதக்கத்துடன் கெட்டிப்பூரானட்டியல் 1 மனுக்கன் சிகப்பு முருகு சோடி 1 கல்மோதிரம் 1 வெள்ளிப் பாதசரம் சோடி 1
2133	22	40		அத்தியடி இளையதம்பி முருகேசு பொன் திருக்கொண்டமாலை 1
2139	22	6		வண்கிழக்கு பொன்னு செல்லையா பொன் பிள்ளைக்காப்பு சோடி 1
2154	24	75		வண்கிழக்கு பொன்னு செல்லையா பொன் கெட்டிக் காப்பு சோடி 1
2162	25	40		நல்லூர் தம்பி செல்லக்கண்ணு பொன் கம்பிப்பூரானட்டியல் 1
2168	27	40		கரைநூர் பிக்கர்பிள்ளை யோன்பிள்ளை பொன் மனுக்கன் சிகப்பு பதக்கத்துடன் கம்பிப்பூரானட்டியல் 1
2179	30	30		தட்டாதெரு முகம்மதுகன்னிறுவுத்தர் சேகாதிறுவுத்தர் பொன் சிகப்புக்கல்மோதிரம் 1
2185	30	130		கொக்குவில் கிழக்கு கார்த்திகேசு முருகேசு பொன் பட்டணங்காப்பு சோடி 1 சங்கிலி அட்டியல் 1
	அக்டோபர்			
2190	1	50		சிவியாதெரு சுப்பிரமணியம் பொன்னையா பொன் சங்கிலி அட்டியல் 1
2197	2	60		வண்கிழக்கு கந்தப்பு சின்னத்துரை பொன் பீலிக்காப்பு சோடி 1
2211	5	250		வண்மேற்கு வீ. க. வேதநாயகம்பிள்ளை பொன்பிருஞ்சுக்காசு 60கோர்த்தமாலை 1
2212	5	60		கொக்குவில் அம்பலவி கந்தர் பொன் சாட்டுக்கொடி 1
2222	8	100		கொக்குவில் கார்த்திகேசு சுப்பிரமணியம் பொன் இமிற். கல் பதக்கத்துடன் சங்கிலி அட்டியல் 1
2236	10	9		வண்கிழக்கு சின்னத்தம்பி சின்னையா பொன் சிகில்மோதிரம் 1
2255	15	820		சுண்டிக்குளி மூத்ததம்பி நாகலுதி பொன் கோட்டை அரைப்பவுன் 71 கோர்த்தமாலை 1
2279	18	65		சிவியாதெரு கோபாலர் சின்னத்துரை பொன் பட்டணங்காப்பு சோடி 1
2283	18	35		வண்மேற்கு வீ. க. வேதநாயகம்பிள்ளை அரைடாலர் 1 கால்டாலர் 1
2297	22	50		கொக்குவில் நமசிவாயம் சிவப்பிரகாசம் பொன் கம்பிப்பூரானட்டியல் 1
2298	22	50		கொக்குவில் நமசிவாயம் சிவப்பிரகாசம் பொன் பட்டணங்காப்பு சோடி 1
2311	23	130		வண்கிழக்கு சிதம்பராதர் சிற்றம்பலம் பொன் சங்கிலிக்கொடி 1
2312	23	55		நல்லூர் விசுவநாதர் பொன்னம்பலம் பொன் சம்பளுதளையல் 2
2316	23	73		வண்கிழக்கு கந்தப்பு சின்னத்துரை பொன் இமிற். கல் பதக்கத்துடன் கம்பிப்பூரானட்டியல் 1 அக்ஷரக்கூடு 1

விற்பனவு:—குரோதனஷ கார்த்திகைமீ 10உ (25-11-25) புதன்கிழமை காலை 10 மணியளவில் எடுபட்டநகை பிறகீங்களாக மிகுதி ஷை கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

அரு. செல்லையா உடையார்,
வெர்திஸ்மேன்தர்.

(Mis. 751.)

ஒரு சாதாரணபொருளே.

நோவுக்கானதைலத்தில் சுகந்தம்தேடமாட்டீர். அநேகமாய்ச் சுகந்தம் உண்டாக்குவதில் நோவை நீக்குங்குணம் மறைந்துவிடுகிறது.

லிட்டில்ஸ் ஓரியன்டல் பாம்

செய்வதில் சுகந்தமே வேண்டுமென்று எதுவுஞ் சேர்க்கவில்லை நோவைக் குணமாக்குஞ் சரக்குகளில் அவைகளின் குணத்தை விலக்கவில்லை. 12 திறமான சரக்குகள் சேர்ந்து அதி உயர்ந்த குணங்கள் வாய்ந்த தைலமே லிட்டில்ஸ் ஓரியன்டல் பாம். அதனால் அது உடனே கீல்வாயு, துடைக்குடைச்சல், இடுப்பு வலி, பாரிச வாய்வு, வாதரோகம், மண்டையிடிப்பு முதலிய நோவுகளைத் திடமாய்க் குணப்படுத்துகிறது.

4—1—25.



(Y. 41. B.)

Printed and published by Pandit V. T. Sambandhan, for and on behalf of the Proprietors, the Jaffna Saiva Paripalana Sabai, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai.